மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 186/2024 |
| பெயர் | : | முத்துவிஜயன் (Lw1/ Pw1) |
| த/பெ. | : | குருசாமி |
| வயது | : | 65 |
| தாலுகா | : | தூத்துக்குடி |
| மாவட்டம் | : | |
| Calling | : | Supervisor |

(A1 and A2 present )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026

முதல் விசாரணை

1) நான் தற்போது தூத்துககுடியில் குடியிருந்து வருகின்றேன், PSTS என்ற நிறுவனத்தில் சுப்பர்வைசராக வேலை செய்து வருகின்றேன். சாட்சி அய்யப்ன், ஹரிகுமார், முத்துராஜ் ஆகிய 3 பேரை தெரியும். அய்யப்ன் எங்கள் நிறுவனத்தின் மேலாளர். ஹரிகுமார். முத்துராஜ் எங்கள் நிறுவனத்தின் வேலை பார்ப்பவர்கள். நாங்கள் வெளிநாடுகளில் இருந்து பொட்டாஷ் உரங்களை துறைமுகத்திற்கு கொண்டு வந்து டிப்பர் லார மூலம் எங்கள் குடோனிற்கு கொண்டு வருவது வழக்கம் 11.06.2024 ம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு 32 டன் பொட்டாஷ் உரங்களை ஏற்றிக்கொண்டு வந்த டிப்பர் லாரி TN 69 AF 4977 என்ற டிப்பர் லாரி எங்கள் டோனிற்கு வரவில்லை என ஹரிகுமார் முத்துராஜ் தகவல் சொன்னார்கள். நாங்கள் சுற்றுப்புறதில் தேடிப்பார்த்தோம். 32 டன் பொட்டாஷ் உரங்கள் மதிப்பு அந்த காலக்கட்டத்தில் 6 லட்சம் ஆகும். 3 நாட்கள் கழித்து மதுரை நெடுஞ்சாலையில் தூத்துக்குடி மக்ருன் என்ற இடத்திற்கு 2 குடோன்கள் தள்ளி காலியான குடோனில் லாரி நிற்பதாகவும் அதன் டிரைவர் நிற்பதாகவும் தகவல் கிடைத்தது. அதன் பேரில் 15.06.2024 ம் தேதி புதியம்புத்துர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையததுதான் (**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) டிரைவரின்பெயர் அருண்பாண்டியன். டிப்பர் லாரியின் உரிமையாளர் மாதவன். எதிரிகள் அருண்பாண்டின் மற்றும் மாதவன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள். எதிரி பயன்படுத்திய டிப்பர் லாரி என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் **(மேற்படி புகைப்படம் அசா**

**ஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) எங்கள் நிறுவனத்திற்கு சொந்மான 32 டன் பொட்டாஷ் உரங்கள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன் போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் PSTS கம்பெனியில் 40 வருடங்களாக வேலை செய்து வருகின்றேன் என்றால் சரிதான். எனக்கு இந்த கம்பெனியில் அனைத்து பணிகளின் விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் முகவரி தூத்துக்குடி மத்திய பாக காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் PSTS கம்பெனி எந்த காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்றால் தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையத்திற்கு உட்பட்டது. சம்பவம் நடந்நதாக சொல்லப்படும் துறைமுகம் எந்த காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்றால் தெர்மல் காவல் நிலையத்திற்கு உட்பட்டது. தெர்மல் நிலைய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட துறைமுகம் பகுதியில் இருந்து தான் சரக்கு காணாமல் போனது என்றால் சரிதான். துறைமுகம் பகுதிக்கும் புதியம்புத்துர் காவல் நிலையத்திற்கும் எந்தவிதமான சம்பந்தம் கிடையாது என்றால் சரிதான். துறைமுக பகுதியில் எங்கள் கம்பெனி சம்பந்தமாக ஏதாவது புகார் இருந்தால் தெர்மல் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். சரக்கு காணமல் போன நாள் 11 ம் தேதி, நான் புகார் மனு கொடுத்தது 15 ம் தேதி என்றால் சரிதான். எனக்கு சரக்கு காணமல் போனதாக தகவல் கிடைத்தது 11 ம் தேதி அதிகாலை 3.00 மணி என்றால் சரிதான். தகவல் கிடைத்த உடனே துறைமுகத்திற்கு உட்பட்ட தெர்மல் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். 03.00 மணிக்கு காணமால் போனதாக தகவல் கிடைத்தது சரக்கு, லாரியில் எத்தனை மணிக்கு சரக்கு ஏற்றியிருந்தது என்றால் அதிகாலை 02.30 மணி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான் அதில் சரக்கு எத்தனை மணிக்கு ஏற்றியிருந்தது என்ற விபரம் 11.06.2024 அன்று 03.30 மணிக்கு என்று குறிப்பிட்டு இருந்தது என்றால் சரிதான். உண்மையில் சம்பவம் நடந்திருநதால் 03.00 மணிக்கு தகவல் கிடைத்தாக சொல்லியிருக்கமாட்டேன் என்றும் புகார் மனுவில் 03.30 மணிக்கு சரக்கை ஏற்றியதாக பொய்யான சங்கதிகள் குறிப்பிட்டு உள்ளேன் என்றாலும் சரியல்ல. பொட்டாஷ் சரக்கின் உரிமையாளர் நானோ எங்களது கம்பெனியோ கிடையாது என்றால் சரிதான். பொட்டாஷ் சரக்கின் உரிமையாளர் மொசைக் ஆவர்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- Tr.A.Dharanidharan
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.